රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site


මගේ අංකය / எனது இல / My No: COMS/Trans/V/වා.ස්.මා./2021
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2021.02.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>2021 இற்கான வருடாந்த இடமாற்றக் கட்டளை விடுத்தல்</u>**
**<u>அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை, அபிவிருத்தி அலுவலர் சேவை, இலங்கை அரச நூலகர் சேவை, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை, இணைந்த சாரதி சேவை, அலுவலக பணியாளர் சேவை</u>**

மேற்படி விடயம் தொடர்பான எனது சம இலக்கமும் 2020.12.17 ஆந் திகதிய கடிதம் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2021 வருடாந்த இடமாற்றக் குழுவின் முன்மொழிவுகள் மற்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீது தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி இடமாற்ற முன்மொழிவுகள் சம்பந்தமாக என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட விடய எடுத்துரைப்புகள் பற்றி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் தொகுதி I இன் XVIII ஆம் அத்தியாயத்தின் 211 மற்றும் 210 ஆகிய பிரிவுகளுக்கு அமைவான முன்மொழிவு மீளாய்வு குழுவின் தீர்மானங்களை இத்துடன் அனுப்பி வைத்துள்ளேன். இதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டதாக மேலே குறிப்பிடட உத்தியோகத்தர்கள் தொடர்பிலான எனது சம இலக்கமும் 2020.12.17 ஆந் திகதியும் கொண்ட கடிதம் மூலமாக உத்தேச 2021 இற்கான வருடாந்த இடமாற்றக் கட்டளையினை இத்தால் விடுக்கிறேன்.

**03 .இடமாற்றக் கட்டளைகள் தொடர்பிலான மேன்முறையீடுகள்**

(அ) இடமாற்றக் கட்டளைகள் தொடர்பாக திருப்தியடையாத உத்தியோகத்தர்களுக்கு **அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் XX ஆம் அத்தியாயத்தின்** ஏற்பாடுகளுக்கிணங்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டினைச் சமர்ப்பிக்கலாம். மேன்முறையீட்டினை ஒன்லைன்(Online) முறையில் http://43.224.125.68:7009 ஊடாகவும் அல்லது தங்கள் நிறுவனத்தினுடாக இணையத்தை அணுகுவதற்கு LGN Wi-Fi வலைப்பின்னலை பயன்படுத்துவதாயின் http://10.250.1.112:7009 ஊடாகவும் சமர்ப்பிக்க இயலும்.

(ஆ) மீளாய்வுக் குழுவுக்கு மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்கள் **மாத்திரம்** அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டினைச் சமர்ப்பிக்கலாம்.

(இ) மேன்முறையீடுகளை ஒன்லைன்(Online) முறையினுடாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்ததன் பின்னர் வன்பிரதியை தங்கள் திணைக்களத் தலைவர்கள் ஊடாக எனக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்துடன் முறையீட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிரூபிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் இணைத்து அனுப்பிவைப்பீராக.

(ஈ) சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் 2021.02.25 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ ஒன்லைனில் (Online) சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு அத்திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் நிராகரிக்கப்படலாம்.

**04.வருடாந்த இடமாற்றக் கட்டளை நடைமுறைப்படுத்தல்.**

2021 ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் கட்டளைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்களுக்கு கட்டுப்பட்டதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது குறிப்பிட்ட இடமாற்றக் கட்டளைகளுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும். **(2021ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்ற தீர்மானங்கள் மற்றும் மீளாய்வுக் குழுவின் தீர்மானங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் இடமாற்றக் கட்டளைகளுக்கு முன்னால் திகதி குறிப்பிடப்பட்டு இருக்காவிடின் அல்லது 2021.03.01ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த அங்கீகரிக்கப்பட்ட இடமாற்றக் கட்டளைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதோடு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் திகதிக்கு பின்னரான திகதி குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய உத்தியோகத்தர்களின் இடமாற்றம் குறிப்பிட்ட இடமாற்றக் கட்டளைகளுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்).** அதற்கிணங்க தங்கள் அமைச்சில் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற / திணைக்களத்தில் /இடமாற்றம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமைகளை பொறுப்பேற்கத்தக்கதாக பிரதியீட்டு அலுவலர் வரும்வரை தடுத்துவைக்காமல் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கின்றேன். வருடாந்த இடமாற்ற கட்டளையொன்றின் படி இடமாற்ற கட்டளையை பெற்றுள்ள அலுவலர் ஒருவர் **புதிய சேவை நிலையத்துக்கு வருகை தராமல் இருக்குமிடத்து அவ்வலுவலர் இடமாற்றம் செய்யப்பட்ட திணைக்களத்தின்/ சேவை நிலையத்தின் தலைவரினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 217 பிரிவிற்கமைய அலுவலர் தானாகவே பதவியை விட்டு விலகியதாக கருத வேண்டுமென அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்திருப்பதால் அதற்கமைய நடவடிக்கை எடுத்து அதுபற்றி எனக்கு அறிவித்தல் வேண்டும்.** 2021 வருடாந்த இடமாற்றக் கட்டளைக்கிணங்க சேவை நிலையங்களுக்குச் சமூகமளிக்கின்ற உத்தியோகத்தர்களினதும் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினதும் விபரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இ.சே/வ.இ.மா/07 மற்றும் இ.சே/வ.இ.மா/08 மாதிரிப் படிவங்கள் மூலமாக இடமாற்றம் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து 2 மாதத்திற்குள் எனக்கு அறிக்கையிடல் வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவைக்குச் சமூகமளித்தமைக்கான மற்றும் விடுவிக்கப்பட்டமைக்கான கடிதங்களின் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். (இ.சே/வ.இ.மா/05 மற்றும் இ.சே/வ.இ.மா/06)

05. வருடாந்த இடமாற்றங்களின் கீழ் என்னால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளைக்கு மேலதிகமாக அமைச்சு அல்லது திணைக்கள உள்ளக இடமாற்றங்களின் கீழ் எவரேனும் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் கிடைத்தாலும்இந்த மீளாய்வுக்குழுக்களின் தீர்மானங்களிலான திருத்தங்களுக்கு , கட்டுப்பட்டதாக 2020.12.17 ஆந் திகதிய இடமாற்றக் கட்டளை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதைக் கருத்திற் கொள்வீராக.

06. மேலும் 2021 வருடாந்த இடமாற்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்தும் பொழுது அமைச்சுக்களின் மாற்றம் காரணமாக எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டிய சேவை நிலையம் தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்டால், அத்தகைய சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு பிரதியீட்டு அலுவலராக குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரின் சேவை நிலையம் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் புதிய சேவை நிலையமாக வேண்டுமென்பதைக் கருத்திற் கொள்ளவும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இ.சே/வ.இ.மா/05

பெயர் :- .....................................

சேவை நிலையம் :- .....................................

திகதி :- .....................................

................................ ஊடாக

ஊடாக ..........................................

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

## புதிய சேவை நிலையத்தில் கடமையினை பொறுப்பேற்றல்

....................................... (வருடம்) வருடத்தில் இணைந்த .......................................(சேவை) சேவையில் வருடாந்த இடமாற்ற கட்டளையின் பிரகாரம் .................................... ஆம் (விடுவிப்பு பெற்ற திகதி) திகதி தொடக்கம் சேவையிலிருந்து விடுவிப்பு பெற்ற நான் .............................................ஆம் (சேவைக்கு சமூகமளித்த திகதி) திகதி .......................................(சேவை நிலையத்தில்) சேவைக்கு சமூகமளித்தேன் என்பதை வினயமுடன் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு உண்மையுள்ள

கையொப்பம் :-..........................................

சேவை :-..........................................

தரம் :-..........................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :-..........................................

சேவை இலக்கம் :-..........................................

---

எனது இலக்கம் :..........................................

திகதி :............................................

சேவைக்கு சமூகமளித்துள்ளதாக உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................................. .............

திணைக்கள தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

இ.சே/வ.இ.மா/06

எனது இல. :- .............................................

திணைக்களம்/ அமைச்சு :- .............................................

திகதி :- .............................................

................................ ஊடாக

ஊடாக ...........................................

செல்வி /திருமதி /திரு ..........................................................

பதவி :- ................................................

<u>வருடாந்த இடமாற்றத்தின் படி கடமையிலிருந்து விடுவித்தல்</u>

சேவையில் (சேவை)...................................... வருடத்தில் இணைந்த (வருடம்) ...................................... வருடாந்த இடமாற்ற கட்டளையின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் இல் கடமையினை பொற (புதிய சேவை நிலையம்) ...................................ப்பேற்கக் கூடிய வகையில் திகதி தொடக்கம் கடமையிலிருந்து (விடுவிப்பு பெற்ற திகதி) ஆம்............................................ .விடுவிப்பதாக வினயமுடன் அறியத்தருகின்றேன்

............................................................

திணைக்கள தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

பிரதி :- இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இ.சே/வ.இ.மா/07

**………………………………… அமைச்சு அலுவலகம் /திணைக்களம் /**
**இருந்து இடமாற்றம் பெற்று சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

**சேவை :- ………………………………......**

| அலுவலரின் பெயர் | சேவை இலக்கம் | தரம் | சேவையை பொறுப்பேற்ற திகதி | இ05/.இ.வ/சே. இநா இற்கு.ப.சே. அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா |
|---|---|---|---|---|
| | | | | |

………………………………………………………………………………
திணைக்கள தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

இ.சே/வ.இ.மா/08

**………………………………… அமைச்சு அலுவலகம் /திணைக்களம் /**
**இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்**

**சேவை :- ………………………………......**

| அலுவலரின் பெயர் | சேவை இலக்கம் | தரம் | விடுவிப்பு பெற்ற திகதி | இ06/.இ.வ/சே. இநா இற்கு.ப.சே. அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா |
|---|---|---|---|---|
| | | | | |

……………………………………………………………………………… …
திணைக்கள தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.